**சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை**

**OS.NO.62/2018** **தேதி.22.08.2025**

**இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.1 ..................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு 22.08.2025 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.**

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | | **திரு.விநாயகம்** | **இனம்** | **ஆண்** |
| **த/பெ.** | | **திரு.பொன்னுசாமி** | **ஊர்/வட்டம்** | **பூட்டுத்தாக்கு** |
| **வயது** | | 66/2025 | **தொழில்** | **செக்கியூரிட்டி** |

துவக்க நேரம் 02.10 PM

**சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.**

4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. எனது பாட்டி பெயர் என்னவென்றால் மாணிக்கம்மாள். எனது பாட்டிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 04 பிள்ளைகள், இதில் 03 பெண், 01 ஆண். பெண் பிள்ளைகளின் பெயர் 1.சாரதா, 2.கமலா, 3.ஜெகதா என்றாலும், ஆண் பிள்ளை கோபால் என்றாலும் சரிதான்.

2. மேற்படி எனது பாட்டியின் பிள்ளைகள் நால்வரும் தற்பொழுது உயிருடன் இல்லை என்றால் சரிதான். கோபாலின் வாரிசுகள்தான் 1.பட்டம்மாள், 2.பிரபாகரன், 3.குணசேகரன் என்றால் சரிதான். சாரதாவின் வாரிசுகள் குப்புசாமி, கௌரி என்றால் சரிதான். தண்டபாணி, மல்லிகா, செந்தில், சோமு (எ) சோமசுந்தரம் ஆகியோர் ஜெகதாவின் வாரிசுகள் என்றால் சரிதான்.

3. நான் கமலாவின் மகன் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை, எனது பாட்டி இறக்குவரை அவர்தான் அனுபவித்து வந்தார் என்றால் ஆமாம். எனது பாட்டி இறந்தபிறகு நாங்கள் அனைவரும் கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்றால் ஆமாம். மாணிக்கம்மாள் வாரிசுகள் என்ற அடிப்படையில் சாரதாவின்

பிள்ளைகளான குப்புசாமி மற்றும் கௌரி ஆகியோர்களுக்கு தாவா சொத்தில் பாக உரிமை உள்ளது என்றால் ஆமாம். மாணிக்கம்மாளை, சாரதாவும், அவரது வாரிசுகள்தான் பராமரித்து வந்தார்கள் என்றால் ஆமாம்.

மறு விசாரணை:- இல்லை.

முடிவு நேரம் 03.20 PM

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.